**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 03 மாதங்களிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில முடிவடைந்த 03 மாதங்களிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 03 மாதங்களிற்கான நிதிக்கூற்றுக்கள்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகார சபையின் நிதிக்கூற்றுக்கள் ஊடாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த 03 மாதங்களிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையுடைய நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், அதிகார சபை வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதிகார சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி, உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகார சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகை முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன், அதிகார சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் அதிகார சபை செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் அரசாங்க மூலதன மானியம் அதிகார சபையின் வரமானமாக இனங்காண வேண்டிய போதும் காலப்பகுதி ஆரம்பத்தில் நிலவிய மதிப்பீட்டு பெறுமதி ரூபா 9.7 மில்லியன் ஆன உபகரண அன்பளிப்பு திரண்ட நிதியத்தின் கீழ் கணக்கிடப்படாது நடைமுறையல்லாத பொறுப்பின் | ஏற்றுக்கொள்கிறேன். இந்த தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கிற்கு இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், நிதிக்கூற்றுக்களில் அதற்குரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபை இஸ்தாபிக்கப்பட்டதுடன் ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டிருக்காததுடன் ரூபா 793,894 ஆன கடந்த காலப்பகுதிக்குரிய பல்வேறு செலவினங்கள் மீளாய்வான்டு காலப்பகுதியின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது. அவ்வாறே நிறுவனத்தை நடாத்திச் செல்லும் கட்டிடத்திற்காக செலுத்தியிருந்த மீள் செலுத்த வேண்டிய வைப்பு தொகையான ரூபா 3,624,642 தொகை ஆரம்ப சொத்தாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் செலவினமாக இனங்கண்டிருந்த ரூபா 793,894 ஆன பெறுமதி முன்னைய காலப்பகுதிக்குரிய செலவினத்திற்கு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் குத்தகை வாடகை அடிப்படையின் மீது வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் திருப்பி செலுத்த வேண்டிய கட்டண தொகையான ரூபா 3,624,642 ஆன தொகை வைப்பு கொடுப்பனவாக இனங்காண நடவடிக்கை எடுக்கிறேன். | ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 03 மாதங்களிற்குரிய அட்டுறு செலவினம் ரூபா 2,051,778 தொகை கணக்கிடப்பட்டிருக்காததுடன் நடைமுறை பொறுப்புக்கள் மற்றும் வருமானத்தை விஞ்சிய செலவினத்தை அப் பெறுமதியால் குறைத்து காண்பிபக்கப்பட்டிருந்தது. | அட்டுறு செலவிமாக இனங்கண்ட ரூபா 2,051,778 ஆன பெறுமதியை நடைமுறை பொறுப்பிற்கு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு செலவினங்களை சரியாக கண்டறிந்து கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | விரிவான வருமான கூற்றில் மீளாய்வாண்டு காலப்பகுதிக்குரிய அரசாங்க வருமானமான ரூபா 15.4 மில்லியனை காட்டும் போது ஆண்டிறுதியில் பொது திறைசேரிக்கு அனுப்பிய ரூபா 293,401 தொகை குறைத்து காண்பிகப்கப்ட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | மீளாய்வாண்டு காலப்பகுதிக்குரி ய அரசாங்க வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கிட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பெற வேண்டிய மீதி | 60,000 | நிதிநிலைமை கூற்றில் திறைசேரி நிதியீட்டலின் கீழ் ரூபா 60,000 ஆன பெற வேண்டிய மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது டன் அதற்குரிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | திறைசேரி மானியங்களிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 60,000 ஆன மீதி சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்த லிற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை 2021 ஒக்தோபர் 08 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 03 மாதங்களிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,342,693 ஆன பற்றாக்குறையாக இருந்தது. இந்த பற்றாக்குறைக்கு நிர்வாக மற்றும் அதிகார சபையை இஸ்தாபிக்கும் செலவினம், அதிகார சபையின் பிரதான வருமான மூலமாகியிருந்த அரசாங்க மானியங்களை விஞ்சி காணப்படுவதம் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச விலைமணு கோரலின் பிரகாரம் மன்னார் பேசினில் M2 ஆராய்சி நிலப் பிரிவில் கனிய எண்ணெய் ஆராய்சி நடவடிக்கைகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட கெயார்ன் லங்கா தனியார் கம்பனி 2011 இல் மேற்கொண்ட அகழ்வின் பிரகாரம் இரண்டு இயற்கை வாயு படிவுகள் உள்ளதாக தேடிக் கொண்டிருந்தனர். இந்த கமபனி மன்னார் பேசினில் ஆராய்சி நடவடிக்கைகளை இடைநடுவே நிருத்தி 2015 ஒக்டோபர் 15 திகதி உடன்படிக்கையை முடிவுறுத்தி இருந்தது. மேலும், இங்கு ஆராய்சி நடவடிக்கைகள் மற்றும் இயற்கை வாயுவை வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்ய விற்பனை மேம்பாட்டு நிகழ்சித் | வழங்கியுள்ள நிலப் பிரதேசத்தினுள் கனிய எண்ணெய் செயற்பாடொன்றை மேற்கொள்ள முடியுமான செயற்பாட்டாளர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக களத்தில் நவீன போக்கிற்கு இணங்கி இலங்கை கனிய எண்ணெய் அபிவிருத்தி அதிகார சபையினால் பாரிய பாரம்பரிய நிலப் பிரிவு 15 km * 15 km வரை குறைக்கப்பட்டது. புதிய ஆராய்சி கூட வரிபட பேசின் மூன்றும் உள்ளடங்கும் வகையில் 922 சிறிய கூடங்களை எல்லைப்படுத்தி நாளாதுவரையாக்கி 2022 ஜுலை 11 ஆம் திகதி வர்த்தமாணி அறிவித்தல் ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. (இணைப்பு 03). இந்த புதிய வரிபடத்தை | இந்த நிலப் பகுதியில் இயற்கை வாயுவை வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்யும் வேலைத் திட்டத்தை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். |

திட்டங்களை நடைமுறைப்படுத்த 2016 ஆண்டில் சர்வதேச விலைமனு கோரலின் மூலம் IHG Global கம்பனியை தெரிவு செய்து 2016 திசெம்பர் முதல் 2018 ஆகஸ்ட் வரை விற்பனை செய்யும் முயற்சியொன்றை நடைமுறைப்படுத்த வலுசக்தி அமைச்சினால் அ.டொ 300,000 தொகை அதாவது அதன் போது நிலவிய செலாவனி விகிதம் பிரகாரம் ரூபா 46,610,853 செலவிடப்பட்டிருந்தது. இந்த கருத்திட்டத்திற்காக அதிகார சபையின் வழிகாட்டலின் கீழ் இயற்கை வாயு கொள்கை ஒன்றை தயாரித்தல், கனிய எண்ணெய் வள சட்டமொன்றை தயாரித்தல் மற்றும் 2022 – 2030 காலத்திற்காக வழிகாட்டல் வரைபடமொன்றை தயாரித்தல் போன்ற விடயங்களை மேற்கொண்டிருந்த போதும் இந்த நிலப் பிரிவில் இயற்கை வாயுவை வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்வதனை மீளாய்வாண்டு இறுதி வரை ஆரம்பித்திருக்கவில்லை. கூட்டிணைந்த ஆய்வு உடன்படிக்கையுடன் இணைத்து கடற்கரை ஆராய்சி நடவடிக்கைகளை அதிகரிக்க மற்றும் கண்டுபிடித்த இயற்கை வாயுவை மூலோபாய ரீதியாக துரித செயற்பாடுகளை பின்பற்றி அபிவிருத்தி செய்ய அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிய கூட்டிணைந்த ஆய்வு உடன்படிக்கைக்கான வசதிகளை வழங்க தேவையான பிரமாணங்கள், மாதிரி உடன்படிக்கை மற்றும் ஏனைய ஆவணங்களை வரைதல் PDASL இனால் 2022 திசெம்பர் மாதத்தில் பூரணப்படுத்தப்பட்டது. தேவையான பிரமாணங்களை வர்த்தமானியில் பிரசுரிக்கும் எதிர்பார்ப்பில், ஆர்வம் காட்டும் சில எண்ணெய் மற்றும் எரிவாயு கம்பனிகள் PDASL தரவு அறைக்கு சென்று 2022 ஆண்டு முழுவதும் விரிவான கலந்துரையாடல் நடாத்தியுள்ளன. தேசிய கனிய எண்ணெய் களஞ்சியம் 2022 இனுள் புதிதாக தயாரித்த மற்றும் மீண்டும் தயாரித்த தரவுகளுடன் நாளாதுவரை ஆக்கப்பட்டுள்ளது.